**சிறப்பு தலைப்பு: சோதனைக்கான கிரேக்க சொற்கள் மற்றும் அவற்றின் அர்த்தங்கள்**
**SPECIAL TOPIC: GREEK TERMS FOR TESTING AND THEIR CONNOTATIONS**

இங்கு இரண்டு கிரேக்க சொற்கள் உள்ளன, அவை ஒருவரை ஒரு நோக்கத்திற்காக சோதிக்கும் அர்த்தத்தைக் கொண்டுள்ளன.

1. *Dokimazō, Dokimion, Dokimasia*

இந்த சொல் எதையாவது (உதாரணமாக, உருவகமாக ஒருவரை ) நெருப்பால் சோதிப்பதற்கான ஒரு உலோகவியலாளர் பதமாகும் (சிறப்பு தலைப்பு: நெருப்பு பார்க்கவும்). நெருப்பு கசடுகளை எரித்து உண்மையான உலோகத்தை வெளிப்படுத்துகிறது (உதாரணமாக, சுத்திகரிக்கிறது). இந்த பௌதீக செயல்முறை தேவன் மற்றும் / அல்லது சாத்தான் மற்றும் / அல்லது மனிதர்கள் மற்றவர்களை சோதிக்கும் ஒரு சக்திவாய்ந்த மரபுத்தொடராக தோற்றம்பெற்றது. இந்த சொல் சோதனைக்கான நேர்மறையான அர்த்தத்தில் ஏற்றுக்கொள்ளும் நோக்கில் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது (சிறப்பு தலைப்பு: கடவுள் தனது மக்களை சோதிக்கிறார் [பழைய ஏற்பாடு]).

இது புதிய ஏற்பாட்டில் சோதனைக்குப் பயன்படுத்தப்படுகிறது

a. தேர்மாடு - லூக்கா 14:19
b. தன்னைத்தானே - 1 கொ. 11:28
c. எங்கள் விசுவாசம் - யாக்கோபு. 1: 3
d. தேவனை கூட - எபி. 3:9

இந்த சோதனைகளின் இறுதி அர்த்தம் நேர்மறையானவை என்று கருதப்பட்டது (ஒ.பா. ரோமர் 2:18; 14:22; 16:10; 2 கொரி. 10:18; 13: 3,7; பிலி. 2:27; 1 பேதுரு 1 : 7) ஆகையால், இந்த சொல் ஒருவர் பரிசோதிக்கப்படல் மற்றும் அங்கீகரிக்கப்படல் என்ற கருத்தைத் தெரிவிக்கிறது.

a. பயனுள்ளதாக இருக்கும்
b. நன்றாக இருக்க வேண்டும்
c. உண்மையானதாக இருக்க வேண்டும்
d. மதிப்புமிக்கதாக இருக்க வேண்டும்
e. கனம்பண்ணப்பட வேண்டும்.

2. *Peirazō, Peirasmus*

இப்பதம் பெரும்பாலும்தவறு கண்டுபிடிப்பது அல்லது நிராகரிக்கும் நோக்கத்திற்கான பரீட்சையின் அர்த்தத்தைக் கொண்டுள்ளது. வனாந்தரத்தில் இயேசுவின் சோதனையுடன் இப்பதம் தொடர்புப்படுகிறது.

a. இது இயேசுவை சிக்க வைக்கும் முயற்சியை வெளிப்படுத்துகிறது (ஒ.பா. மத் 4: 1; 16: 1; 19: 3; 22:18, 35; மாற்கு 1:13; லூக்கா 4: 2; எபி. 2:18).
b. இந்த சொல் *(peirazōn)* மத். 4: 3 ல் சாத்தானுக்கு ஒரு தலைப்பாக பயன்படுத்தப்படுகிறது; 1 தெச. 3: 5 (உதாரணமாக, "சோதனைகாரன்").
c. பயன்பாடு

(1). இயேசுதேவனை சோதிக்க வேண்டாம் என்று மனிதர்களை எச்சரித்தார் (ஒ.பா. மத். 4: 7; லூக்கா 4:12, [அல்லது கிறிஸ்துவை ஒ.பா. 1 கொரி 10: 9]).

(2). தோல்வியுற்ற ஒன்றைச் செய்வதற்கான முயற்சியையும் இது குறிக்கிறது (ஒ.பா. எபி 11: 29).

(3). விசுவாசிகளின் துன்பங்களும் சோதனைகளும் தொடர்பாக இது பயன்படுத்தப்படுகிறது (ஒ.பா. 1 கொரி. 7: 5; 10: 9, 13; கலா. 6: 1; 1 தெச. 3: 5; எபி. 2:18; யாக்கோபு. 1: 2, 13, 14; 1 பேதுரு 4:12; 2 பேதுரு 2: 9).

Copyright © 2014 Bible Lessons International